Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 05, 2024

வெள்ளிக்கிழமை ஜனவரி 05, 2024 | ஒளி: 10 கதிர்: 165 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# “109 ஐ அழுத்தவும்”

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் குறித்து முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கு தொலைபேசி இலக்கமொன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த துரித இலக்கம் 24 மணிநேரமும் செயற்படும் வகையில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பில் ஏதேனும் தகவல் தெரியும் நிலையில், 109 எனும் துரித இலக்கத்திற்குத் தகவல் வழங்க முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.






வடக்கில் ஜனாதிபதி

# பல்லடுக்கு பாதுகாப்பு

**ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மூவர் கைது**

**அரசியல் கைதிகளின் விடுதலைக்கு மகஜர்**

**சிலருக்கு நீதிமன்றத்தால் தடை விதிப்பு**

நிதர்ஷன் வினோத் , க. அகரன்

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் யாழ்ப்பாண விஜயத்தை முன்னிட்டு பாதுகாப்பு கடுமையாக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அருகில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மூன்று பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட செயலக வளாகம் சுற்றியுள்ள பகுதிகள் வீதிகளில் வீதித்தடைகள் கொண்டுவரப்பட்டு முழுமையாக பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், கலகமடக்கும் படையினர் மற்றும் இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2

# தாலியை அறுத்த இருவர் சிக்கினர்

நிதர்ஷன் வினோத்



யாழ்ப்பாணத்தில் தேன் விற்பனையில் ஈடுபடுவது போல பாசாங்கு செய்து மூதாட்டியிடம் 7 பவுண் பெறுமதியான தாலியை அறுத்து சென்றவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வல்வெட்டித்துறை தொண்டமானாறு பகுதியில் கடந்த டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் தொடர்பாகவே இருவரும் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ச்சி P2

காணி மோசடிகள்:

# நொத்தாரிசுகள் ஐவருக்கு முன்பிணை

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில், கடந்த சில மாதங்களில் காணி மோசடிகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளுடன் தொடர்புடைய ஐந்து நொத்தாரிசுகள் முன்பிணை பெற்றுள்ளனர்.

அதேவேளை, மேலும் சில நொத்தாரிசுகள் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டு,

தொடர்ச்சி P2





# இராணிவத்தையில் தீ: மூன்று வீடுகள் கருகின

ஆ.ரமேஸ்.

லிந்துலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாகசேணை பெரிய இராணிவத்தை தோட்டத்தில் தீவிபத்து ஏற்பட்டு மூன்று வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வியாழக்கிழமை (04) அதிகாலை 4.45 மணியலவில் திடீரென ஏற்பட்ட இந்த தீவிபத்தில் நிர்க்கதிக்கு ஆளான இரண்டு குடும்பங்களைச் சேர்ந்த 09 பேர், பொது வாசிகசாலையில் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

ஈரானில் குண்டு வெடிப்பு:


# 103 பேர் பலி; 141 பேர் காயம்

ஈரானில் அடுத்தடுத்து நடந்த இரண்டு குண்டு வெடிப்பு சம்பவங்களில் 103 பேர் பலியாகியுள்ளனர். 141 பேர்காயமடைந்துள்ளனர்.

கெர்மான் பகுதியில் உள்ள ஈரானின் முன்னாள் தளபதி காசிம் சுலைமானின் கல்லறை அருகே அடுத்தடுத்து குண்டுகள் வெடித்துள்ளன.

காசிம் சுலைமானின் நினைவை அனுசரிக்க ஏராளமானோர் வியாழக்கிழமை (04) கூடியிருந்தபோது, குண்டு வெடிப்பு சம்பவம் இடம்பெற்றுள்ளது.





# மூன்று நாட்களில் 282 பேருக்கு டெங்கு

எம். றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் வருடம் பிறந்து முதல் மூன்று நாட்களிலும் 282 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டு, அவர்களுக்கு வைத்தியசாலைகளில் சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வியாழக்கிழமை (04) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் மருதங்கேணி மற்றும் நெடுந்தீவு பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்து காணப்படுகிறது. தினமும் சராசரியாக 70 தொடக்கம் 100 நோயாளர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றார்கள்.

கடந்த டிடெம்பர் மாதத்தில் யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச செயலக பிரிவுகளிலே டெங்கு நோயின் பரம்பல் தீவிரமாக காணப்பட்டது.

தொடர்ச்சி P2

# போதகரின் போதனையால் ஏழு பேர் மர்மமாக மரணம்

கடந்த சில நாட்களில் பதிவாகிய ஏழு சந்தேகத்திற்கிடமான மரணங்கள் தொடர்பான விசாரணைகள் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் (CID) ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ருவன் பிரசன்ன குணரத்ன என்ற நபரின் போதனைகளுக்கு ஆளான நபர்கள் தங்கள் வீடுகளில் இருந்தால் அவதானத்துடன் செயற்படுமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# சிலருக்கு பிரவேசிக்க தடை

இலங்கை மின்சார சபையின் தொழிற்சங்கத் தலைவர் ரஞ்சன் ஜெயலால் உள்ளிட்டோர் ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி வளாகங்களுக்குள் பிரவேசிக்கத் தடை விதித்து கோட்டை நீதவான் நீதிமன்றம் வியாழக்கிழமை (04) உத்தரவு பிறப்பித்துள்ளது.

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்டமூலத்திற்கு எதிராக இலங்கை மின்சார ஊழியர் சங்கம் கடந்த புதன் கிழமை மூன்று நாள் எதிர்ப்புப் பிரச்சாரத்தை முன்னெடுத்துள்ளது.

பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையிலும் அரச சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்காத வகையிலும் போராட்டத்தில் ஈடுபடுமாறு நீதவான் திலின கமகே, போராட்டத்தில் ஈடுபடுவோருக்கு உத்தரவிட்டுள்ளார்.

**ஜனாதிபதி நிதிய நிதி:**

**100% வரை அதிகரிப்பு**

(முழுச்செய்தி 3ஆம் பக்கம்)

நாட்டைப் பற்றி சிந்திக்கும் பயணத்திற்காக

# “அனைவரும் ஒன்றிணைவோம்”

தீரோ இணையும் நிகழ்வில் சஜித் கோரிக்கை



வரப்பிரசாதங்கள், சலுகைகள், தனிப்பட்ட நன்மைகள், அதிகார பதவிகள் மற்றும் அரசியல் பங்குகளின் அடிப்படையிலான அரசியல் ஒப்பந்தங்களில் ஈடுபடுவதை ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் முற்றாக நிராகரித்துள்ளன எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தங்களைப்பற்றி அல்லது நாட்டை பற்றி சிந்திக்கும் அனைவரும் ஒன்றிணைய வேண்டுமென அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

# குற்றச் செயல்களை ‘யுக்திய’ தூண்டுகிறது

பெற்றோர்கள் இருவரும் கைது செய்யப்படும்போது, அவர்களது வீடுகளில் பாதுகாப்பற்ற நிலையில், சிறுவர்கள் பாதாள உலகத்தில் சேர்வததற்கும், பெண்களை விபச்சாரத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதற்கும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் ‘யுக்திய’ நடவடிக்கை வழிவகுக்கின்றது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க புதன்கிழமை (03) தெரிவித் துள்ளார்.

தொடர்ச்சி P2



# பாராளுமன்றம் கலைக்கப்படுமா?

இன்னும் சில தினங்களில் பாராளுமன்றத்தைக் கலைப்பது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாக உயர்மட்ட அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகின்றது.

இப்போதும் கூட ஆளும் கட்சியினர் ஏனைய அரசியல் குழுக்கள் மற்றும் கட்சிகளுடன் இது தொடர்பில் சில கலந்துரையாடல்களை மேற்கொண்டு வருவதாகவும் தகவல் வெளியாகி உள்ளது. எவ்வாறாயினும், பாராளுமன்றம் கலைக்கப்படுவது தொடர்பில் இதுவரையில் எவ்வித ஆயத்தங்களும் இடம்பெறவில்லை என பாராளுமன்றத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

வடக்கில் ஜனாதிபதி

# பல்லடுக்கு பாதுகாப்பு



உலங்கு வானூர்தி மூலம் யாழ்ப்பாணத்துக்கு இன்று (04) வருகைதரும் ஜனாதிபதி, யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் மாலை 3 மணி முதல் 5.30 வரை நடைபெறும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் பங்குகொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஜனாதிபதியிடம் கையளிப்பு செய்யப்படவுள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்கு வழிசெய்வதற்கான மகஜரில் கையொப்பமிடும் நடவடிக்கை வியாழக்கிழமை(04) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்தில், மதியம் 2 மணியளவில் குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் சமயத் தலைவர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசியல் கைதிகளின் உறவினர்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலைக்கான கையெழுத்துப் பிரதிகளைக் காலக்கிரமத்தில் தயார்படுத்தி, வடக்கிற்கு வருகைதரும் ஜனாதிபதி அவர்களுக்கு நேரில் கையளிக்கப்படவுள்ளது

இந்நிலையில், வவுனியாவிற்கான அபிவிருத்தி குழு கூட்டத்தினை நடத்துவதற்கு, வெள்ளிக்கிழமை (05) வவுனியா மாவட்டச் செயலாளருக்கு வருகைதரும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸாரினால் வவுனியாவை சேர்ந்த சிலருக்கு நீதிமன்றத்தினூடாக தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் சங்கங்களின் தலைவர், செயலாளர்கள் முன்னாள் அரசியல் கைதியும் போராளிகள் நலன்புரி சங்கத்தின் வவுனியா மாவட்ட தலைவர் அரவிந்தன் ஆகியோருக்கும் குறித்த தடை உத்தரவு பெறப்பட்டிருந்ததுடன் அதன் பிரதிகள் அவர்களுக்கு வியாழக்கிழமை (04) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த முறை ஜனாதிபதி வவுனியாவிற்கு வருகை தந்த போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# தாலியை அறுத்த இருவர் சிக்கினர்

செய்யப்பட்டுள்ளனர். கோண்டாவில் மற்றும் தெல்லிப்பழையை பகுதியைச் சேர்ந்த முறையே 50, 41 வயதானவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

காங்கேசன்துறை பிராந்திய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் சந்தேக நபர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

# நொத்தாரிசுகள் ஐவருக்கு முன்பிணை

தற்போது பிணையில் விடுக்கப்பட்டுள்ள நிலையிலும் அவர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன

இந்நிலையில், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரபல சட்டத்தரணியும் , நொத்தாரிசுமானவரை ஐந்து இலட்ச ரூபாய் சரீர பிணையில், யாழ்ப்பாண மேலதிக நீதவான் நீதிமன்று புதன்கிழமை (03) முன் பிணை வழங்கியுள்ளது.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள காணி ஒன்று தொடர்பாக ஏற்கெனவே நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தீர்ப்பு ஒன்றை வழங்கியிருந்தது.

அந்தத் தீர்ப்புக்கு மாறாக மோசடியாகத் தயாரிக்கப்பட்ட உறுதி ஊடாக அந்தக் காணி விற்பனை செய்யப்பட்டுள்ளது என அது தொடர்பான வழக்கு யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் குறித்த காணி உறுதிப்பத்திரம் தொடர்பாக அந்த உறுதிப்பத்திரங்களை வரைந்த பிரசித்த நொத்தாரிசும், சட்டத்தரணியுமான ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை (29) யாழ்ப்பாணம் நீதிமன்றில் முற்பிணை விண்ணப்பத்தைத் தாக்கல் செய்தார்.

இந்த வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, இந்த உறுதியை வரைந்த பிரசித்த நெத்தாரிசு உண்மைக்குப் புறம்பாகத் தகவலை இட்டு மோசடியான முறையில் ஆவணம் ஒன்றைத் தயாரித்ததாகக் கூறி அவரைக் கைது செய்ய வேண்டும் என்று பொலிஸார் மன்றிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

சட்டத்தரணிகள் மற்றும் பொலிஸாரின் சமர்ப்பணங்களின் பின்னர் கட்டளைக்காகப் புதன்கிழமை (03) குறித்த வழக்கு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அதன் போது, நீதிமன்றம் முன் பிணை கோரிய சட்டத்தரணிக்கு 5 இலட்சம் ரூபாய் சரீரப் பிணை என முன்பிணை வழங்கி கட்டளையிட்டது.

அதேவேளை, குறித்த சட்டத்தரணிக்கு எதிராக ஏற்கெனவே நடைபெற்று வரும் காணி வழக்கில் முன்னிலையாக வேண்டும் என்றும் நீதிமன்று உத்தரவிட்டது.



# இராணிவத்தையில் தீ: மூன்று வீடுகள் கருகின

மூன்று வீடுகளில் இரண்டு வீடுகளில் மட்டுமே ஆட்கள் இருந்ததாகவும் மற்றொரு வீடு ஆட்களில்லாமல் மூடப்பட்டிருந்ததாக அறியமுடிகின்றது.

பெரிய இராணிவத்தை தோட்டத்தில் இலக்கம் (01) தொடர் குடியிருப்பில் கடந்த 2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் இரவு வேளையில் தீ விபத்து ஏற்பட்டு 16 குடும்பங்களைச் சேர்ந்த 78 பேர் நிர்க்கதிக்கு உள்ளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இரண்டாவது தீ விபத்து சம்பவமும் ஏற்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் 10 வீடுகளைக் கொண்ட தொடர் வீட்டுத் தொகுதியில் மூன்று வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் தோட்ட மக்கள் தடுத்தனர். மக்களின் முயற்சியில் தீ கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.



# மூன்று நாட்களில் 282 பேருக்கு டெங்கு

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்திலே மருதங்கேணி மற்றும் நெடுந்தீவு தவிர்ந்த ஏனைய 13 பிரதேச செயலர் பிரிவுகளிலும் டெங்கு நோயின் பரம்பல் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்திலேயே யாழ். மாவட்டத்திலே 3,986 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். இந்த வருடத்தில் முதல் மூன்று நாட்களில் 282 டெங்கு நோயாளர்கள் இனங் காணப்பட்டுள்ளார்கள் என்றார்.

# “அனைவரும் ஒன்றிணைவோம்”

இவ்வாறு சேரும் அனைவரும் நிபந்தனையற்ற உன்னத அறிவொளி அரசியலை நடைமுறைப்படுத்தவே ஒன்றிணைகின்றனர் என்றும் இந்நாட்டில் நடந்து வந்த வரும் அரசியல் கட்சி தாவல்களைத் தூக்கி எறிந்து ‘தங்களுக்கு முன் நாடும், தங்களுக்கு முன் மக்களும்’ என்ற உன்னத கருத்தின் அடிப்படையில் குடும்பவாதமற்ற, மக்கள் வாதத்தைக் கொண்ட அரசியல் கொள்கை ரீதியான பயணத்தை மேற்கொள்வதற்காகவே இந்த கூட்டணி அமைக்கப்படும் என்றார்.

மனிதாபிமான முதலாளித்துவம் நீதி, நியாயத்தை நிறைவேற்றும் சமூக ஜனநாயகம் எனும் 2 பாதைகளின் ஊடாக ஒரு சீரான நடுநிலையான



பாதையில் பயணித்து வருவதாகவும்,இது சலுகைகள் வரப்பிரசாதங்களைப் பெறும் ரம்மியமான பயணம் அல்லாது கடினமான பயணம் என்றும், சொந்தத்தை விட மக்களைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய பயணம் என்றும் அவர் மேலும் இங்கு தெரிவித்தார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தயாஸ்ரித திசேரா ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொள்ளும் நிகழ்வில் கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

# போதகரின் போதனையால் ஏழு பேர் மர்மமாக மரணம்

குணரத்ன அண்மையில் ஹோமாகமவில் விஷம் அருந்தி உயிரிழந்து சடலமாக மீட்கப்பட்டார். தத்துவ போதகரான ருவானுடன் நெருங்கிய தொடர்புடைய மேலும் இருவர் விஷம் அருந்தி உயிரிழந்துள்ளனர்.

21 வயதான யுவதி ஒருவரும் 34 வயதுடைய ஆண் ஒருவரும் விஷம் அருந்தி உயிரிழந்திருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த யுவதியின் சடலம் யக்கல பிரதேசத்தில் உள்ள குடியிருப்பு ஒன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளதுடன், அம்பலாங்கொட பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய நபரின் சடலம் மஹரகமவில் உள்ள விடுதி ஒன்றில் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் மதம் தொடர்பான விரிவுரைகளை ஆற்றி வருபவர் என அறியப்பட்ட ருவன் பிரசன்ன குணரத்ன அண்மையில் விஷம் அருந்தி தன்னுயிரை மாய்த்துக்கொண்டார். அதன் பின்னர், அவரது மனைவியும் அவர்களது மூன்று குழந்தைகளும் இதேபோன்று இறந்து கிடந்தார்.

உயிரிழந்த பெண்ணும், ஆணும் ருவான் மற்றும் அவரது குடும்பத்தினரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட போதகரின் பிரசங்கங்களால் பாதிக்கப்பட்ட நபர்கள் தங்கள் வாழ்க்கையைப் பரிதாபமாக முடித்துக்கொண்டதாக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தல்துவ கூறினார்.

‘அடுத்த ஆன்மாவை நோக்கிய விரைவான மாற்றத்திற்கான ஒரு வழிமுறையே தற்கொலை” என இந்த பிரசங்கங்களில், குணரத்ன உயிரை மாய்ப்பதை ‘நியாயப்படுத்தியதாக’ கூறப்படுகிறது .

உயிரிழந்த போதகர், கொட்டாவ பகுதியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில், மாதம் ரூ. 150,000 செலுத்தி வாடகைக்கு எடுத்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# குற்றச் செயல்களை ‘யுக்திய’ தூண்டுகிறது

“அறிக்கைகளின்படி, கொழும்பு பகுதியில் பல பெற்றோர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களின் குழந்தைகள் சிக்கித் தவிக்கின்றனர், அவர்களுக்கு உணவு மற்றும் பாதுகாப்பு வழங்க யாரும் இல்லை. சட்டத்தரணியை ஒழுங்கு செய்யப் பணம் இல்லை.

“இன்னும், போதைப்பொருள் விநியோகத் தொழிலின் முக்கிய புள்ளிகளை பொலிஸார் கைது செய்ததாக எங்களுக்கு எந்த செய்தியும் வரவில்லை. முக்கிய சந்தேக நபர்களின் பெயர்கள் பெரும்பாலும் ஊடகங்களில் அறிவிக்கப்பட்டன. ஆனால் அந்த பெரிய மீன்கள் பொலிஸாரால் பிடிக்கப்படுவதைப் பார்க்க நாங்கள் காத்திருக்கிறோம்.

கடந்த நாட்களில் புல்டோசர்களை பயன்படுத்தி கடற்கரையில் உள்ள விடுதிகளை பொலிஸார் அழித்ததைப் பார்த்தோம். கடற்கரையில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களை அகற்ற நடவடிக்கை எடுக்கக் கடலோர பாதுகாப்புத் துறைக்கு முழு அதிகாரம் உள்ளது. அவற்றை அகற்ற நீதிமன்ற உத்தரவு பெற வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கீகரிக்கப்படாத கட்டுமானங்களை அகற்றி, அந்த கட்டுமானங்கள் போதைப்பொருள் வியாபாரத்தில் சம்பாதித்த பணத்தில் கட்டப்பட்டதாகக் கூறுவது சட்டத்திற்கு எதிரானது” என்று அவர் மேலும் கூறினார்.

தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களின் ஹோட்டல்களை இடிக்கத் தெரிவு செய்வதற்கும் வேறு சில ஹோட்டல்களை தமது தொழிலைத் தொடர அனுமதிப்பதற்கும் இடையில் முக்கியமான தொடர்பு இருப்பதாகப் பாராளுமன்ற உறுப்பினர் ரணவக்க சுட்டிக்காட்டினார்.

எனவே, ‘யுக்திய’ நடவடிக்கையின் முடிவு குறித்து ஆழ்ந்த கவனம் செலுத்துமாறு ஜனாதிபதியிடம் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

# பாராளுமன்றம் கலைக்கப்படுமா?

இதேவேளை, எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 12ஆம் திகதி வரை பாராளுமன்றம் கூடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், பாராளுமன்ற கூட்டத்தொடர் பொங்கலுடன் ஒத்திவைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தன.



ஜனாதிபதி நிதிய நிதி:

# 100% வரை அதிகரிப்பு

### சில நோய்களுக்கும் மருத்துவ உதவி

### கண் அறுவை சிகிச்சை செய்ய மருத்துவ உதவி

### குழந்தைகளுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு உதவி

### மாத வருமான வரம்பு 02 இலட்சம் ரூபாயாக அதிகரிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைவாக ஜனாதிபதி நிதியத்தினால் தற்போது வழங்கப்படும் மருத்துவ உதவிக் கொடுப்பனவுகளை 2024 ஜனவரி 01ஆம் திகதி முதல் 50% இலிருந்து 100% ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 2024ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியின் வழிகாட்டுதலுக்கு அமைய ஜனாதிபதி நிதியத்தின் மூலம் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகளை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி நிதியத்தின் செயலாளர் சரத்குமார தெரிவித்தார்.

இதேவேளை, 2024ஆம் ஆண்டு புத்தாண்டில் தமது கடமைகளை ஆரம்பிக்கும் ஜனாதிபதி நிதியத்தின் ஊழியர்களுக்கு ஆசி வழங்கும் நிகழ்வும் புதன்கிழமை (03) நிதிய அலுவலக வளாகத்தில் இடம்பெற்றது.

இதன்படி, இதுவரை மருத்துவ உதவி வழங்கப்படாத நோய்கள் கண்டறியப்பட்டு, அந்த நோய்களுக்கான மருத்துவ உதவிகள் வழங்கும் பணி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல், 21 வயதுக்குட்பட்டவர்களுக்கு, தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகளில் கண் சத்திர சிகிச்சை மேற்கொள்வதற்கு மருத்துவ உதவி வழங்கப்படும்.

நோய்வாய்ப்பட்டவர்கள் மருத்துவ உதவி பெறுவதற்காக நகரத்திற்கு வருவதைக் குறைப்பதற்காக, நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளின் ஜனாதிபதி நிதியத்தில் இலகுவாகப் பதிவு செய்யும் முறையும் 2024ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கராபிட்டிய வைத்தியசாலையில் வேலை நேரத்தின் பின்னர் இருதய சத்திரசிகிச்சையை மேற்கொள்வதற்காக வழங்கப்படும் கொடுப்பனவு இந்த வருடம் முதல் அதிகரிக்கப்படவுள்ளதுடன், ஏனைய வைத்தியசாலைகளுக்கும் இந்த முறையை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல் ராகம வைத்தியசாலையில் சிறு குழந்தைகளுக்கான கல்லீரல் மாற்று சத்திரசிகிச்சைகளுக்காக ஒரு மில்லியன் ரூபாய் வரையான மருத்துவ உதவி தொகையும் வழங்கப்படும். மேலும், தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகளில் மேற்கொள்ளப்படும் புற்றுநோய் அறுவை சிகிச்சைகளுக்கு இது வரை மருத்துவ உதவி வழங்கப்படாததோடு, அதற்கான மருத்துவ உதவி இந்த ஆண்டு முதல் வழங்கப்படும்.

தனியார் அல்லது அரை அரசு மருத்துவமனைகள் தவிர, அரசு மருத்துவமனைகளும் இந்த ஆண்டு முதல் எலும்பு மாற்று அறுவை சிகிச்சைக்கு முன்பும் பின்பும் வெளியில் செய்யப்படும் மருத்துவப் பரிசோதனைகளுக்கு இந்த ஆண்டு முதல் மருத்துவ உதவி வழங்கப்படும்.

மருத்துவ உதவிகளை வழங்குவதில் நோயாளர்களின் குடும்ப அலகு ஒன்றின் மாதாந்த வருமான வரம்பான 150,000 ரூபாவை இந்த வருடம் முதல் 02 இலட்சம் ரூபாவாக அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவ உதவி பெற வேண்டிய நடுத்தர மக்கள் ஜனாதிபதி நிதியில் இருந்து மருத்துவ உதவி பெற முடியும்.

தமிழக மீனவர்களுக்கு

## விளக்கமறியல் நீடிப்பு

■ எஸ்.தில்லைநாதன்




யாழ்ப்பாணம்- பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டிருந்த 12 தமிழக மீனவர்களுக்கான விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டின்பேரில், 12 மீனவர்கள் கடந்த டிசம்பர் 10ஆம் திகதி கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதனையடுத்து, படகின் உரிமையாளருக்கு வெளிவிவகார அமைச்சின் யெலாளர் ஊடாக அழைப்பாணை அனுப்புவது தொடர்பில் யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் முன்வைத்த விண்ணபத்தை பருத்தித்துறை நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை நிராகரித்துள்ளார்.

மேலும், சட்டமா அதிபர் திணைக்களத்தில் இருந்து அரச சட்டத்தரணி நேரில் முன்னிலையாகி படகு உரிமையாளரை வழக்கில் சேர்ப்பது தொடர்பில் மன்றில் விண்ணப்பம் செய்வதற்கு ஜனவரி 10ஆம் திகதி வரை அவகாசம் வழங்குமாறு கோரியிருந்தனர்.

இந்நிலையில், புதன்கிழமை (03) குறித்த 12 பேருக்குமான விளக்கமறியலை நீடித்து பருத்தித்துறை நீதவான் கட்டளை பிறப்பித்துள்ளார்.

அதனடிப்படையில், 12 மீனவர்களுக்கான விளக்கமறியலை எதிர்வரும் 10ஆம் திகதி வரை நீடித்து கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சிறுத்தைக்கு பயந்து

## கால்வாயில் விழுந்த 'ரஞ்சித் மாமா'



விறகு வெட்டச் சென்றபோது சிறுத்தை பாய்ந்ததால், அருகில் உள்ள கால்வாயில் விழுந்து, ஒன்பது கிலோமீட்டர் தூரம் அடித்துச் செல்லப்பட்டு, மரம் ஒன்றில் ஏறி, இரண்டு நாட்களாக அந்த மரத்திலேயே இருந்த 'ரஞ்சித் மாமா' என்பவரை, உள்ளூர்வாசிகள் காப்பாற்றியுள்ளனர்.

மனம்பிட்டிய-மாகங்தொட்ட கிராமத்தைச் சேர்ந்த 66 வயதான கே. டபிள்யூ.ரஞ்சித் பெரேரா என்பவரே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாகந்தோட்டை வனப்பகுதிக்குத் தனியாகச் சென்று கொண்டிருந்தபோது, சிறுத்தை ஒன்று தன் மீது பாய்ந்ததாகவும், அதே சமயம் அருகில் இருந்த ஓடையில் விழுந்து நீரோட்டத்தில் அடித்துச் செல்லப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

அவர் நீரில் விழுந்து சுமார் ஒன்பது கிலோமீற்றர் தூரம் சென்றபோது, அங்குள்ள மரத்தில் ஏறிவிட்டார்.

இந்த நிலையில், தனது கணவன் காணாமற்போனமை தொடர்பில் அவரது மனைவி, மனம்பிட்டிய பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

மேலும், அவர் காணாமல் போனதை அறிந்த மாகங்தொட்ட கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள், காடுகளில் தேட ஆரம்பித்தபோது, கரபொல பிரதேசத்தில் 12 அடி உயரமுள்ள மரத்தில் ஏறியிருப்பதைக் கண்டு அவரை காப்பாற்றியுள்ளனர்.

"சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால்

## பல கிராமங்கள் அழிவடையும்"

■ நடராசா கிருஸ்ணகுமார்



பொன்னாவெளி மக்களின் பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் வெளிப்படுத்த உள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அனுர திசநாயக்க தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி- பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றிய பிரதிநிதிகள் கொழும்பில் வைத்து புதன்கிழமை (03) சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பொன்னாவெளியில் சுண்ணக்கல் அகழ்வுக்கு எதிராக தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் போராட்டத்திற்கு நேரடியாக வருகைதந்த ஜே.வி.பியினர் போராட்டத்திற்கு தமது ஆதரவினை வெளிப்படுத்திய நிலையில் இந்த கலந்துரை இடம்பெற்றுள்ளது.

இச்சந்திப்பின்போது, "சுண்ணக்கல் அகழ்வு நடைபெற்றால் பல கிராமங்கள் அழிவடையும். கடல் நீர் உட்புகும். கிராமங்களில் இருந்து மக்கள் இடம்பெயர வேண்டிவரும்" என பல விடயங்களை அமைச்சர் அனுர திசநாயக்கவின் முன்னிலைக்குக் கொண்டுவர ப்பட்டுள்ளதுடன், அதனைக் கேட்டறிந்த அமைச்சர், பொன்னாவெளி மக்களின் பிரச்சனைகளை வெளி உலகத்திற்குக் கொண்டு செல்வதாகவும், குறிப்பாக பாராளுமன்றத்தில் இது தொடர்பாக வெளிப்படுத்த உள்ளதாகவும், போராட்டக் காரர்களுடன் தொடர்ந்து இணைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வு

■ எஸ்.சதீஸ்



காசல் ரீ நீர்த்தேக்கத்திற்கு நீர் ஏந்தி செல்லும் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் பகுதியில் உள்ள கேசல்கமுவ ஓயாவில் இனந்தெரியாதவர்கலாள் சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெற்று வருவதாகப் பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

காசல்ரீ நீர்த் தேக்கம் மற்றும் கெர்க்கஸ்வோல்ட் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள உப மின் நிலையத்திற்கு கேசல்கமுவ ஓயாவில் இருந்து இந்த நீர் கொண்டு செல்லப்படுகிறது.

இருந்த போதிலும், பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்ட பகுதியில் உள்ளவர்களே இந்த பிரதேசத்தில் இரவு நேரங்களில் இந்த சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டு வருவதாக மக்கள் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். இந்த சட்ட விரோத மாணிக்கக்கல் அகழ்வினால் குறித்த கேசல்கமுவ ஓயாவின் நீரினை அன்றாட தேவைகளுக்குப் பயன்படுத்தும் பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகப் பிரதேச மக்கள் தெரிவிப்பதோடு, குறித்த பகுதியில் இந்த சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடும் நபர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கையினை பொகவந்தலாவ பொலிஸார் மேற்கொள்ளவேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

## வீதி விபத்தில் மாணவன் மரணம்

■ ஏ.ஏம்.ஜலீல்



மாத்தளையில் செவ்வாய்க்கிழமை (02) இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் படுகாயமடைந்து, வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த 18 வயதான மாணவன் மரணமடைந்துள்ளார்.

உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலையில் தரம் 12 வணிக பிரிவில் கற்று வந்த இவர், மோட்டார் சைக்கிளில் பாடசாலைக்குச் சென்று திரும்பும் வழியில், இன்னுமொரு சைக்கிளுடன் மோதி விபத்துக்கு உள்ளானார்.

இவ்விபத்தில் மாணவனுக்கு எலும்பு முறிவு ஏற்பட்டு, மாத்தளை வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்ற நிலையிலேயே மரணமடைந்துள்ளார்.

## "ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்க"

■ அப்துல்சலாம் யாசீம்



திருகோணமலை - ரொட்டவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் உயர்தரக் கற்கை நெறிகளுக்கான ஆசிரியர்கள் இன்மையால் மாணவர்களது எதிர்காலம் நிச்சயமற்றதாக காணப்படுவதாகத் தெரிவித்து வியாழக்கிழமை (04) திருகோணமலை மனித உரிமை ஆணைக்குழுவிடம் சமூக ஆர்வலர்கள் முறையிட சென்றுள்ளனர்.

பல வருட காலமாகக் குறித்த பாடசாலையில் நிலவிவரும் ஆசிரியர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்து தருமாறு கோரிக்கை விடுத்த போதிலும், இது தொடர்பாக அரச மட்டத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாததன் காரணமாகக் குறித்த விடயம் தொடர்பில் முறையிடத் தாம் வருகை தந்ததாகவும் தெரிவித்துள்ளனர்.


குறித்த பாடசாலையில் கடந்த 2015ஆம் ஆண்டு உயர்தர கலை பிரிவு ஆரம்பிக்கப்பட்டு 2017ஆம் ஆண்டு மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றிய நிலையில், போதிய ஆசிரியர்கள் இல்லாமையினால் 50% மாணவர்களே சித்தியடைந்தனர்.

அதனைத் தொடர்ந்து, கடந்த காலங்களில் குறித்த பாடசாலையில் உயர்தரம் நடத்தப்படவில்லை. இதனால் மாணவர்கள் வெளியிடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு சென்று கல்வி கற்கும் நிலை ஏற்பட்டது.

குறித்த மாணவர்கள் அதே பாடசாலையில் உயர்தரம் கற்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்த போதிலும், பெற்றோரின் பொருளாதாரத்தை கருத்தில் கொண்டும் குறித்த பாடசாலைக்கு ஆசிரியர்களை பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஹெரொய்னுடன் நால்வர் கைது

■ மொஹொமட் ஆஸிக்



கண்டி - அருப்பொல பிரதேசத்தில் நடத்தப்பட்டு வந்த பஞ்சகர்மா நிலையம் (SPA) ஒன்றிலிருந்து போதைப்பொருளை கைப்பற்றிய அலதெனிய பொலிஸார், அங்கு பணி புரியும் நான்கு பணியாளர்களைக் கைது செய்துள்ளனர்.

கண்டி-அலதெனிய பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி, குறித்த பஞ்சகர்மா நிலையத்தை சோதனையிட்டபோது, அங்குப் பணி புரியும் பெண் முகாமையாளர் மற்றும் அவரது உதவியாளர் இருவரிடமிருந்து 47 கிராம் மற்றும் 400 மில்லி கிராம் ஹெரொய்ன் போதைப்பொருளை கைப்பற்றியுள்ளதுடன், மேலும் இரு ஊழியர்களிடம் இருந்து 215 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளையும் கைப்பற்றியுள்ளனர்.

## குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்பு

■ ரஸீன் ரஸ்மின்

புத்தளத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம்- கரம்பை, தேத்தாப்பொல காமன்ட் வத்தை பகுதியைச் சேர்ந்த உதயகுமார் (வயது 55) எனும் இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலமாக மீட்கப்பட்ட நபரின் மனைவி வெளிநாட்டில் தொழில் புரிந்து வரும் நிலையில், இரண்டு பிள்ளைகளையும் தானே பராமரித்து வந்துள்ளதாகவும், கடந்த முதலாம் திகதி வீட்டில் இருந்து வெளியே சென்ற குறித்த நபர், காணாமல் போயுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளின்போது, தெரியவந்துள்ளது.

இதுபற்றி குடும்பத்தினர் பொலிஸில் முறைப்பாடு செய்த நிலையில், காணாமல் போன நபர் புதன்கிழமை (03) பிற்பகல் வடிகானுக்குள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

## கரையொதுங்கிய மர்ம பொருள்

■ எஸ்.தில்லைநாதன்




யாழ். வடமராட்சி கிழக்கு உடுத்துறை ஒன்பதாம் வட்டாரம் அரசடி முருகன் கோவிலடி பிரதேசத்தில் இந்த மர்ம பொருளொன்று கரையொதுங்கியுள்ளது.

குறித்த பொருளை பொதுமக்கள் அதிகளவானோர் பார்வையிட்டு வருவதுடன், பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மர்ம பொருளில் Asia 2 என பெயரிடப்பட்டுள்ளதாகவும் கப்பலில் இருந்து தவறி விழுந்து கரையொதுங்கி இருக்கலாமெனவும் சந்தேகம் வெளியிடப்படுகின்றது.

அண்மைய நாட்களாக உடுத்துறை வேம்படி, நாகர்கோவில் ஆகிய பிரதேசங்களில் பல்வேறு விதமான மர்ம பொருட்கள் கரையொதுங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மடக்கிப் பிடிக்கப்பட்ட மணல் டிப்பர்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி-பூநகரி சாமிப்புலம் கிராமத்தில் கடத்தப்பட்ட மணலுடன் சென்ற டிப்பரை விசேட அதிரடிப் படையினர் மடக்கிப் பிடித்துள்ள சம்பவம் புதன்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

பிடிக்கப்பட்ட டிப்பரை மணலுடன் பூநகரி பொலிஸாரிடம் கையளிக்கப்ப ட்டுள்ளதுடன், பூநகரி பிரதேசத்தில் தொடர்ச்சியாக மணல், மரக்கடத்தல்கள் இடம் பெறுவதன் காரணமாக அதனை தடுக்க விசேட அதிரடிப்படையினர் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



விற்பனைக்கு

கொழும்பு-7 இல், காணியின் மதிப்பு 14பேர்ச் உடனடியாக விற்பனைக்கு உண்டு. பயன்படுத்தப்பட்ட வீடு, பெரிய அறைகள், 0718858788, தரகர்கள் தேவையில்லை

கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9 (2) ஆம் பிரிவின் கீழ் கீழ்வரும் கம்பனி 2023 டிசெம்பர் மாதம் 12 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

கம்பனியின் பழைய பெயர்:
ரு/ஹனு லங்கா மினரல்ஸ் (பிரைவேட்) லிமிடெட்

கம்பனியின் புதிய பெயர்:
கிரிஸ்டல்ஸ்டோன் (பிரைவேட்) லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட இலக்கம்:
பி வீ 111444

பதிவுசெய்யப்பட்ட அலுவலக முகவரி:
இல.34/1, காசல் வீதி, கொழும்பு 08

கம்பனி செயலாளர்கள்
கோர்ப்பரேட் எட்வைசரி சேர்விசஸ் (பிரைவேட்) லிமிடெட்

# ஆரோக்கியமான, வலிமையான மனித சமுதாயம் மாயமாகும்

நெருக்கடியில் இருந்து ஒவ்வொருவரும் மீண்டெழவே முயற்சிப்பர். அதற்காக, தொழிலுக்கு மேல், இன்னும் இரண்டொரு தொழில்களைச் செய்வதற்கே முனைவார்கள். ஏனெனில், நிலைமை அந்தளவுக்கு மோசமாகிக்கொண்டிருக்கின்றது.

பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (வற்) 15 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டதை அடுத்து, வற் விலக்களிக்கப்பட்ட பட்டியலில் உள்ள பொருட்கள், சேவைகளைத் தவிர, ஒரு கோப்பை தேநீர் முதல் அனைத்துப் பொருட்களின் விலைகளும் ரொக்கெட் வேகத்தில் அதிகரித்தன.

சாதாரண பெட்டிக்கடைகள் முதல், உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து வர்த்தக நிலையங்களுக்குச் செல்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது. அங்குச் செல்வோரும் குறைந்த விலையில் கிடைக்கும் பொருட்களையே தேடுகின்றனர். மரக்கறி கடைகளுக்குச் சென்று கிலோ கிராம்களில் கொள்வனவுச் செய்தோர். கிராம்களில் கொள்வனவுச் செய்கின்றனர்.

தம்புள்ளை நகரச் சில்லறை மரக்கறி சந்தையில் ஒரு காய் பச்சை மிளகாய் 15 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டது. அந்த தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ கிராம் பச்சை மிளகாய் மொத்த விலையில் 1,300 முதல் 1,800 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது.

ஒரு காய் பச்சை மிளகாயை 15 ரூபாய்க்கு வாங்கி சாப்பாட்டில் எத்தனை குடும்பங்கள் கலந்தன. நம் நாடு விவசாய நாடு என்று பெருமையுடன் அறிவித்தாலும் ஒரு காய் பச்சை மிளகாயைக்கூட வாங்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

அரிசி உற்பத்தியில் தன்னிறைவான நாடாக்குவோம் எனக் கூறிக் கொண்டிருந்தாலும், எவ்விதமான ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. அரிசியை ஏனைய வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையிலேயே நாடு இருக்கின்றது.

கிடைப்பதைச் சாப்பிடும் பழக்கத்தை வழக்கமாக்கிக்கொள்ளவே பலரும் முயற்சிக்கின்றனர். அந்தளவுக்கு மரக்கறிகளின் விலைகள் எகிறியுள்ளன. அத்துடன், சத்தான, நோயெதிர்ப்பு கொண்ட மரக்கறிகளை உணவில் சேர்த்துக்கொள்ளாவிடின், குழந்தைகளும் பாதிக்கப்படுவர்.

இலங்கையில் 14 சதவீதமான குடும்பங்கள் தமது பிள்ளைகளுக்கு போதுமான உணவை வழங்குவதற்காக உண்ணும் உணவின் அளவை மட்டுப்படுத்தியுள்ளதாக உலக உணவுத் திட்டம் அண்மையில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் உள்ள ஒவ்வொரு 10 குடும்பங்களில் இரண்டு குடும்பங்கள் தமது வருமானத்தில் 75 சதவீதத்தை உணவுக்காகச் செலவிடுவதாகவும், 24 சதவீதமான குடும்பங்கள் மிதமான உணவுப் பாதுகாப்பின்மையால் அவதிப்படுவதாகவும் அந்த ஆய்வு அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

ஒவ்வொரு 10 குடும்பங்களில் 4 குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையைச் சமாளிக்க பல்வேறு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதாகவும், அத்தகைய நடவடிக்கைகளை எடுத்த குடும்பங்களில் 57 சதவீதம் பேர் தங்களுக்குப் பிடித்த உணவுகளை அல்லது கூடிய விலையுள்ள உணவை உட்கொள்வதைத் தவிர்த்தனர், மேலும் 27 சதவீதம் பேர் உணவின் அளவைக் குறைத்துள்ளனர்.

நிலைமை இப்படியே சென்றால் எதிர்காலத்தில் ஆரோக்கியமான, வலிமையான மனித சமுதாயத்தை நம் நாடு காணாது.

மாறாக, முடிகள் நிறைந்த, பலவீனமான, நோய்வாய்ப்பட்ட மனித சமுதாயத்தைக் காண்போம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

எடுத்தெறிந்து பேசுவது மமதையின் வெளிப்பாடு என்றே சொல்ல வேண்டும். விதண்டாவாதத்துடன் எவருக்கும் பணியாமல், தாங்கள் சொல்வது மட்டுமே சரியானது எனப் பேசுபவர்களை, எவருமே விரும்பமாட்டார்கள்.

எமது நடை, உடை, பாவனை, பேசும் முறை போன்றவற்றை, சுற்றி இருப்பவர்கள், எப்பொழுதும் அவதானித்துக் கொண்டே இருப்பார்கள். கண்ணியமாக நடந்து கொள்வபர்களேயே சமூகம் விரும்புகின்றது.

எவ்வளவு பெரும் அந்தஸ்தும் கல்விப் புலமையும் இருப்பவர்களின் நடத்தையிலும் குணத்திலும் கோணல் புத்தி இருந்தால், அவர்களிடம் இருந்து மற்றையோர் விலகிப்போய் விடுவார்கள்.

நெஞ்சத்தில் மாசு இன்றி, கலகலப்பாக, நகைச்சுவை உணர்வோடு, ஆணவச் செருக்கு அற்றவர்களை, விரும்பாதவர்கள் எவருமே இல்லை.

வெறுப்பு குரோதங்களை வளர்ப்பது சுலபமானது. சாந்தம், அமைதி, எளிமையுடன் வாழ்வதற்கு, ஆன்ம சுத்தி அவசியமானது. இதற்கு மனொ சக்தி பிரதானமானது.

நல்லன எதுவெனப் பலருக்கும் தெரியும். ஆனால், அவற்றைக் கடைப்பிடிக்க முயற்சி செய்ய வேண்டும். இது சிரமமானது அல்ல!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பாதுகாப்பற்ற வீதிகள்

நுவரெலியா மாவட்டத்தில் பல சிறு வீதிகள் முறையாக நிர்மாணிக்கப்படாமையால் அவ்வீதிகளைப் பயன்படுத்தும் பாடசாலை மாணவர்கள் உட்பட பிரதேச வாழ் மக்கள் அச்சத்திலுள்ளனர்.

குறிப்பாக தலவாக்கலை பிரதேச செயலகத்தின் கொட்டாகலை பிரதேச சபை நிர்வாகத்திற்குட்பட்ட தலவாக்கலை - ட்ருப் வீதியிலிருந்து கட்டுக்கலை கொரின் பிலிகண்டாமலை ஆகிய தோட்டங்களுக்குச் செல்லும் குறுக்கு வீதியைப் பயன்படுத்துவதில் மக்கள் அச்சத்துடன் உள்ளனர்.

இச்சிறு வீதியானது தலவாக்கலை பாரதி மகா வித்தியாலய விடுதிகள் மற்றும் தலவாக்கலை தோட்ட குளத்தினருகே காணப்படுகிறது.

அத்தோடு, இச்சிறு வீதியினூடாக பாதுகாப்பற்ற இரு சிறிய பாலங்கள் காணப்படுகின்றன. அதன் மீது பயணிப்பதும் ஆபத்தாகவே உள்ளது. மேலும், இச்சிறு பாலங்களின் இரு பக்கத்திலும் பாதுகாப்புக்காக எந்தவிதமான அம்சமும் இல்லை. இவ்வழியாகச் செல்வோர் சற்று அலட்சியமாகவோகவனயீனமாகவோ பாரிய விபரீத விளைவைச் சந்திக்க நேரிடும். ஒரு பாலத்தின் கீழ் செல்லும் நீரோடையானது காட்டின் வழியே சென்று மேல் கொத்மலை நீர்த்தேக்கத்தில் இணைகிறது. மற்ற பாலத்தின் கீழ் செல்லும் நீரானது தலவாக்கலை தோட்ட தேயிலை தொழிற்சாலை வரை பாய்கிறது. எனவே இவ் இரு பாலங்களும் பாதுகாப்பின்றியே உள்ளது.

எனவே, இப்பிரதேசங்களின் மக்களுடைய பாதுகாப்பு கருதி உரிய வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த துரித நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

– சுஜிதா

கறுப்பு ஜூலை யின் நாற்பதாண்டுகளின் பின் – 34:

# பனாகொட நாட்கள் எழுப்பும் கேள்விகள்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1960ஆம் ஆண்டு அரசாங்கம் நீதிமன்ற மொழிச் சட்டத்தின் மூலம் சிங்களத்தையே வழக்காடலுக்கான அதிகாரப்பூர்வமான மொழியாக்கியது. 1961இல், எந்த விதமான தயாரிப்புமின்றி, தமிழரசுக் கட்சி தமிழரின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தொடங்கிய சத்தியாகிரகப் போராட்டம் மக்கள் ஆதரவைப் பெற்றிருந்தது. ஆனால், அதைத் தக்கவைப்பதற்கான திட்டமிடலோ தொலைநோக்கி தமிழரசுக் கட்சித் தலைவர்களிடையே இல்லை. இந்நிலையில் ஒரு சமஷ்டித் தமிழரசை அடையாளப்படுத்தும் விதமாகத் தமிழரசுக் கட்சி 'தமிழரசு' முத்திரை, அஞ்சலட்டை ஆகியவற்றை அச்சிட்டு ஒரு 'அஞ்சல் சேவையையும்' தொடக்கி வைத்தது. இத் தவறான நடவடிக்கையைக் காரணங்காட்டி, அரசாங்கம் அவசரகால சட்டத்தைப் பிரகடனம் செய்தது. அத்துடன் சத்தியாக்கிரகப் போராட்டம் முடிவடைந்தது. பெரும் அமர்க்களமாகத் தொடங்கிய தபாற்சேவையானது, இரண்டு மாதங்களுக்கு மேலாக நடைபெற்ற முழுப் போராட்டத்தையும் ஒரே நாளில் முடக்கியது.

முக்கியமான தலைவர்கள் கைது செய்யப்பட்டு பனாகொட இராணுவ முகாமில் வைக்கப்பட்டனர். மக்கள் ஆதரவுக்கு முன்னுரிமை கொடுக்காத தமிழரசுக்கட்சியின் செயற்பாடுகள் சத்தியாகிரகப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்தன. இவ்விடத்தில் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த நவரத்தினசிங்கம் இரத்தினவரோதயம் இராஜவரோதயம் அவர்கள் பனாகொட சிறையில் இருந்தபோது, எழுதிய குறிப்புகள் முக்கியமானவை. என்.ஆர்.இராஜவரோதயம் அவர்களின் நினைவுக் குறிப்புகள் 'Panagoda Days' என்ற தலைப்பில் 2003இல் நூலாக வெளியிடப்பட்டது. ஈழத்தமிழ்த் தேசிய அரசியலின் வரலாற்றையும் அதன் திசை வழியையும்
அறிய விரும்புவோர் வாசிக்க வேண்டிய குறிப்புகள் அவை.

அரசாங்கத்தின் நடத்தை, பாராளுமன்ற இடதுசாரிகளின் சந்தர்ப்பவாதம் உள்ளிட்ட விடயங்களையும் பேசுகின்ற இக்குறிப்புகள் மிகவும் முக்கியமான அவர் அங்கத்துவம் வகித்த தமிழரசுக் கட்சியின் நடத்தை பற்றிய வினாக்களை எழுப்புகின்றன. குறிப்பாக சத்தியாகிரகத்தின் தோல்வியின் பின்புலத்தில் ஒரு சுயவிமர்சனமாக எழுதப்பட்ட நினைவுக் குறிப்புகளாகவே இவற்றை நோக்க வேண்டியுள்ளது. மூன்று முக்கியமான விடயங்களை இராஜவரோதயம் குறிப்பிடுகிறார்.

முதலாவது, சத்தியாகிரகம் குறித்த தெளிவான திட்டமிடல் இல்லை. அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் மிகவும் மந்த கதியில் நகர்ந்ததாலும் அரசாங்கப் பிரதிநிதிகளின் அகங்காரமான நடத்தையாலும் விசனமடைந்த தமிழரசுக் கட்சி சத்தியாகிரகத்தை அறிவித்தது. குறிப்பாகக் காந்திய வழியிலான அறப்போராட்டம் என்பது மக்கள் ஆதரவையும் நியாயத்தையும் பெற்றுத்தரும் என்று தமிழரசுக்கட்சித் தலைவர்கள் எதிர்பார்த்தனர். 1956 முதலே தனிச்சிங்களச் சட்டத்தை எதிர்ப்பது குறித்த வேலைத்திட்டங்கள் எதனையும் தமிழரசுக் கட்சி உருவாக்கியிருக்கவில்லை. அரசின் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் எதிர்வினையாக சில செயல்கள் முன்னெடுக்கப்பட்டதேயன்றி நீண்டகால நோக்கில் உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கில் அல்ல.

இரண்டாவது, தபால் சேவை ஆரம்பித்தமையானது மிகத்தவறான அதேவேளை மோசமான செயல் என்பதைத் தனது குறிப்புகளில் ஆணித்தரமாக இராஜவரோதயம் எழுதுகிறார். மிக அதிகளவிலான மக்கள் ஆதரவை சத்தியாகிரகப் போராட்டம் பெற்றிருந்த நிலையில் அரசியல் முதிர்ச்சியற்ற வெறும் தேசியவாத உணர்வுகளைக் கிளறும் செயலாகவே இதை அவர் குறிக்கிறார்.

மூன்றாவது, போராட்டம் குறித்தோ எதிர்காலம் குறித்தோ அக்கறை தமிழரசுத் தலைவர்களிடம் இருக்கவில்லை. சிறையில் அவர்களின் நடத்தையானது மக்களின் மீதான அக்கறை பற்றியதாகவோ, உரிமைகள் குறித்தானதாகவோ இருக்கவில்லை. சிறையிலிருந்து விரைவில் விடுதலையாவதற்கு என்ன செய்ய வேண்டும். சிறையில் மேலதிகமாக எவ்வகையான சுகபோகங்களைப் பெற்றுக் கொள்ளலாம் போன்றனவே அவர்களது அக்கறையாக இருந்தன.

இக்குறிப்புகள் தமிழ்த் தேசிய அரசியல் எதிர்கொள்ளப்போகும் வங்குரோத்து நிலையை மிகத் தெளிவாக அடையாளங்காட்டின. அவசரகாலச்சட்டத்தின் கீழ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்ட தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பல மாதங்கள் கழித்தே விடுவிக்கப்பட்டனர். சத்தியாகிரகத்தின் தோல்வியும் தமிழரசுக் கட்சித் தலைவர்களின் கையாலாகாத நிலையும் தமிழரசுக் கட்சியின் மீதான மக்கள் மதிப்பைக் குறைத்தது. இந்நிலையில் இலங்கையில் நடைபெற்ற சில நிகழ்வுகள் தொடர்பில் தமிழரசுக் கட்சி எடுத்த நிலைப்பாடுகள் கவனிக்கப்பட வேண்டியவை.

1962ஆம் ஆண்டு இலங்கையில் பெட்ரோலிய எரிபொருள் விநியோகமும் விற்பனையும் ஷெல், கல்ற்றெக்ஸ், மொபில் ஆகிய மூன்று பன்னாட்டுக் கம்பனிகளிடமுமிருந்து இலங்கைப் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்துக்கு மாற்றப்பட்டன. அனைத்துப் பெட்ரோலிய எரிபொருள் நிரப்பு நிலையங்களும் பெட்ரோலியக் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டுக்குட் கொண்டு வரப்பட்டன. இது மேற்குலக நலன்களுக்கு எதிரான நடவடிக்கையாகும். இதைக் கடுமையாக எதிர்த்த அமெரிக்கா இலங்கைக்கு வழங்கிவந்த உதவிகளை நிறுத்தியது. தேசியமயமாக்கலை ஐக்கிய தேசிய கட்சி எதிர்த்தது. அது ஆச்சரியமானதல்ல. ஆனால் இந்தத் தேசியமயமாக்கல் நடவடிக்கையைத் தமிழரசுக் கட்சி கடுமையாக எதிர்த்தது. இது தமிழரசுக் கட்சியின் நலன்கள் மக்கள் சார்ந்ததல்ல என்பதை இன்னொருமுறை உறுதி செய்தது.

இக்காலப்பகுதியில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையில் எல்லைப் பிரச்சனை தீர்க்கவியலாத நிலையை எட்டியது. இந்தியாவின் அதிகாரத்துவ அணுகுமுறை போரைத் தவிர்க்கவியலாத தாக்கியது. சீனாவைக் குற்றவாளி என்று கூறி தமிழரசுக் கட்சி சீன எதிர்ப்பு ஊர்வலங்களை நடத்தியது. இந்த விடயத்திலும் தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கமே நின்றது. இரு கட்சிகளதும் வர்க்க நலன்கள் இருவரையும் ஓரணியில் திரள வைத்தன. இருவரும் இணைவதற்கான வாய்ப்புகள் அதிகரித்திருந்தன. தமிழரசுக் கட்சியினரிடையே ஐக்கிய தேசியக் கட்சியை முழுமையாக நம்பவியலும் என்ற எதிர்பார்ப்பு அதிகரிக்கத் தொடங்கியது.

மறுபுறம் சத்தியாகிரகத்தின் தோல்வியைத் தொடர்ந்து எதையாவது செய்தாக வேண்டிய கட்டாயம் தமிழரசுச் தலைவர்களுக்கு ஏற்பட்டது. அவர்கள், 1962இல், முறையாகத் திட்டமிடாத இன்னுமொரு இயக்கத்தை முன்னெடுத்தனர். அரசாங்கத்துடனான அனைத்துத் தொடர்பாடல்களையும் தமிழிலேயே செய்யும்படி தமிழ் மக்களைத் தூண்டும் இப் போராட்டம் பிசுபிசுத்துப் போயிற்று. ஏனெனில் தமிழ்ச் சமூகத்தில் மேல்மட்டங்களில் இருந்தவர்களே அரசாங்கத்துடன் கூடுதலான கடிதத் தொடர்பாடல்களைக் கொண்டிருந்தனர். பொதுவாக ஆங்கிலத்தைப் பயன்படுத்துவது அவர்கட்கு வசதியானதாக இருந்தது. இதில் பலருக்குத் தமிழ் பேசத் தெரிந்திருந்தளவு எழுதத் தெரிந்திருக்கவில்லை. இவை குறித்தெல்லாம் சிந்திக்காமல் இன்னொரு தோல்வியடைந்த போராட்டத்தை தமிழரசுக்கட்சி முன்னெடுத்தது.

அதே காலப்பகுதியில், கிழக்கில் தொடங்கப்பட்ட காணி அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ் மக்களைக் குடியேற ஊக்குவிக்கும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு வெளியேறத் தமிழர்கள் காட்டிய தயக்கத்தால் அதுவும் முடங்கிப் போயிற்று.

இறுதியாக, தமிழர்களுக்கு நன்கு பழக்கமான 'அப்புக்காத்து அரசியலை' தமிழரசுக் கட்சி முன்னெடுத்தது. மொழிப்பிரச்சினை தொடர்பாகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக 'அரசாங்க தமிழ் எழுதுவினைஞர் சங்கம்' என்ற பெயரில் ஒரு தொழிற்சங்கத்தை தமிழரசுக்கட்சி தொடங்கியது. இதன் மூலம் சிங்கள மட்டுமே சட்டத்தை எதிர்க்க முனைந்தது. இத் தொழிற்சங்கத்தின் மூலம் எடுத்த சட்ட நடவடிக்கைகளும் தோல்வியடைந்தன. இதையடுத்து இது தொடர்பில் பிரித்தானிய 'பிறிவி கவுன்சிலுக்கு' செய்யப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டது.

இவையெல்லாம் ஒரு வலியச் செய்தியைச் சொல்கின்றன. மக்கள் என்ன நினைக்கிறார்கள், மக்களின் ஆதரவுத்தளம் எத்தகையது போன்ற வினாக்களைத் தமிழரசுக் கட்சித் தலைமை என்றுமே கருத்தில் கொள்ளவில்லை. 1950களில் தமிழரசுக் கட்சியிடம் ஒரு ஜனரஞ்சக அணுகுமுறை இருந்து வந்தது. 1961ம் ஆண்டுச் சத்தியாகிரகப் போராட்டம் வரை, அதற்கு மக்கள் திரளின் ஆதரவு இருந்தது. அதற்கப்பால் தமிழரசுக் கட்சிக்குத் தமிழ் மக்களைத் தமது உரிமைகட்காகப் போராடத் தலைமை தாங்கும் ஆற்றல் இல்லை என்பது 1962ஆம் ஆண்டளவிலே தெளிவாகி விட்டது.

ஒரு தசாப்த கால 'சிங்களம் மட்டும்' சட்டமானது, படித்த சிங்கள இளைஞர்கள் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்பது தெளிவாகத் தெரிந்ததும் இனப் பதற்றங்கள் அதிகரித்தன. தமிழ் படித்த இளைஞர்கள் இன்னும் பெரிய பிரச்சினைகளை எதிர்கொண்டனர். இருப்பினும், தமிழர்கள், சிங்கள மொழியைக் கற்கத் தயாராக இருந்தனர். இருந்தபோதும், அரச வேலைவாய்ப்புகள் சவாலானவையாக இருந்தன. படித்த சிங்கள இளைஞர்கள் அரச உயர் பதவிகளில் இருந்த ஆங்கிலம் படித்த உயரடுக்கினரை இடமாற்றம் செய்வதில் எந்த நம்பிக்கையும் இல்லாமல் இருந்தனர். இந்த இயலாமையை மடைமாற்ற சிங்கள தேசியவாதிகள் தமிழர்களே தங்கள் துயரத்திற்குக் காரணம் எனக் குற்றம் சாட்டினர். இதன் விளைவால் மிகவும் குறுகிய காலத்திலேயே தமிழ், சிங்கள இளைஞர்கள் இருவரும் தமது அவல நிலைக்குத் தீவிரமான தீர்வுகளைக் காண ஆரம்பித்தனர். இதன் விளைவுகளை தமிழ்த்தேசியவாதமும் இலங்கை அரசும் ஒரு தசாப்தகாலத்துக்குள் அனுபவித்தது.

SLT-MOBITEL இரத்தினபுரி கிளை

# புதிய முகவரிக்கு மாற்றம்




வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற உயர்தரமான சேவைகளை பெற்றுக் கொடுப்பதற்கான தமது அர்ப்பணிப்பை மீள உறுதி செய்து, தேசிய தொலைத்தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநரான SLT-MOBITEL, தனது இரத்தினபுரி கிளையை புதிய முகவரிக்கு இடமாற்றியுள்ளது.

இல. 428, பிரதான வீதி, இரத்தினபுரி எனும் முகவரியில் அமைந்துள்ள இந்தப் புதிய கிளை, வாடிக்கையாளர்களுக்கு இணைப்பை நெருக்கமடையச் செய்வதில் கவனம் செலுத்துவதாக அமைந்துள்ளது. நவீன வசதிகளைக் கொண்டு, பெருமளவு உள்ளக இடவசதிகளுடனான இந்தக் கிளை, வாடிக்கையாளர்களுக்கு நட்பான வகையில் உள்ளம்சங்களைக் கொண்டுள்ளது.

SLT-MOBITEL flagship stores களில் கிடைக்கும் சகல பிரதான சேவைகளையும் புதிய இரத்தினபுரி கிளை வழங்கும். வாடிக்கையாளர் சேவை, புதிய இணைப்புகளை வழங்கல், கட்டணப் பட்டியல் உதவிகள் மற்றும் கோரிக்கைகள் போன்ற அனைத்தும், வாடிக்கையாளரின் சௌகரியத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

குறிப்பிட்ட வாழ்க்கை முறைகளுக்கு பொருத்தமான தீர்வுகள், பிரத்தியேகமான கவனிப்புகள் மற்றும் நிபுணத்துவ ஆலோசனைகள் போன்றவற்றை அர்ப்பணிப்பான கிளை ஊழியர்கள் வழங்குவார்கள். அதனூடாக சாதாரண கொடுக்கல் வாங்கல்களுக்கு அப்பாற்பட்ட வாடிக்கையாளர் உறவுகளை கட்டியெழுப்ப SLT-MOBITEL எதிர்பார்த்துள்ளது. மேலும், இலங்கையின் இல்லங்கள் மற்றும் வியாபாரங்களில் அதிகரித்துச் செல்லும் டிஜிட்டல் தேவைகளை நிறைவேற்றக்கூடிய சாதனங்கள், புதிய இணைப்புகள் மற்றும் eSIM சலுகைகள் போன்ற ஊக்குவிப்பு அம்சங்களையும் இந்தக் கிளை கொண்டிருக்கும்.

வாடிக்கையாளர்களுக்கு பரந்தளவு சாதனங்கள், நிலையான மற்றும் மொபைல் தீர்வுகள், நிறுவனசார் தீர்வுகள் போன்றவற்றுடன், அறிவார்ந்த ஊழியர்களிடமிருந்து டிஜிட்டல் செயற்பாடுகள் பற்றிய நிபுணத்துவ வழிகாட்டல்களையும் வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொள்ள முடியும். புதிய கிளை திறந்துள்ளதனூடாக, தனது பிராந்திய பிரசன்னத்தை மேம்படுத்துவதற்கு SLT-MOBITEL எதிர்பார்ப்பதுடன், பிரதேசத்தின் வாடிக்கையாளர்களுக்கு சௌகரியமான சேவைகளைப் பெற்றுக் கொடுக்கவும் எதிர்பார்த்துள்ளது.

கொழும்பு துறைமுக நகரத்தில் இயங்க

# கொமர்ஷல் வங்கிக்கு உரிமம்

கொமர்ஷல் வங்கி பி.எல்.சிக்கு கொழும்பு துறைமுக நகரமான, துறைமுக நகரில் காணப்படும் சிறப்புப் பொருளாதார வலயத்தில் வெளிநாட்டு வங்கிச் சேவைகளை வழங்குவதற்கான அங்கீகரிக்கப்பட்ட உரிமம் அண்மையில் வழங்கப்பட்டது. நாட்டின் பொருளாதார நிலப்பரப்பை மாற்றும் பல நாணய சர்வதேச வணிகம் மற்றும் நிதிச் சேவை கேந்திர நிலையமாக இந்த பொருளாதார வலயம் அமைந்துள்ளது.

இந்த AP உரிமம் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவினால் வங்கிக்கு வழங்கப்பட்டது. கொமர்ஷல் வங்கியானது கொழும்பு துறைமுக நகரத்தின் எல்லைக்குள்ளும் வெளியிலும் இயங்குவதற்கு வழி வகுத்துள்ளதுடன் முதலீட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வங்கிச் சேவைகளை வழங்குகிறது.

விசேட பொருளாதார வலயத்தில் செயற்படுவதற்கு அங்கீகாரம் பெற்ற முதலாவது வங்கியாக தெரிவு செய்யப்பட்டமை தொடர்பில் கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரி சனத் மனதுங்க கருத்து தெரிவிக்கையில், 'இலங்கையில் மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்டுள்ள உயர் தரம்கொண்ட ஒரே தனியார் துறை வங்கியாக உள்நாட்டு அமைப்பு ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வங்கி அல்லது D-SIB வங்கியான கொமர்ஷல் வங்கி கொழும்பு துறைமுக நகரத்தில் பிரசன்னத்தை நிலைநாட்ட எதிர்பார்க்கப்படும் நிறுவனங்களின் நிதித் தேவைகளுக்குச் சிறந்த முறையில் சேவையாற்றுகிறது. பெருநிறுவனங்கள் மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு பதிலளிப்பதில் எங்களுக்கு விரிவான அனுபவம் உள்ளது பெருநிறுவன மற்றும் சில்லறை வங்கித் தேவைகளுக்கு சேவை செய்யும் உயர்-மேம்பட்ட உலகத் தரம் வாய்ந்த டிஜிட்டல் வங்கித் தளங்களைக் கொண்டுள்ளோம், மேலும், கொழும்பின் வளர்ச்சியை எளிதாக்குவதில் முக்கிய பங்கை வகிக்க எதிர்பார்த்துள்ளோம்' என்றார்.

கொமர்ஷல் வங்கி இலங்கை வங்கிகளில் பரந்த சர்வதேச தடயத்தைக் கொண்டுள்ளது. வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 20 கிளைகளை இயக்குகின்றது.





இறப்பர் விவசாயிகளின் குழந்தைகளின்

# கல்விக்கு சியெட் ஆதரவு

சியெட் களனி ஹோல்டிங்ஸ், அதன் விநியோகச் சங்கிலியின் முக்கிய அங்கமான இறப்பர் விவசாயிகளின் குழந்தைகளின் கல்வியை ஆதரிப்பதற்காக ஒரு புதிய சமூகத் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

10,000 விவசாயக் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து 100 சதவீத இயற்கை இறப்பர் தேவைகளைக் கொண்ட இலங்கையின் டயர் தேவைகளில் பாதியை உற்பத்தி செய்யும் சியெட், இறப்பர் வளரும் பகுதிகளில் பாடசாலை புத்தகப் பைகள், எழுதுபொருட்கள் மற்றும் கல்வித் தேவைககளுக்கான பிற பொருட்களையும் விநியோகிக்கத் தொடங்கியுள்ளது.

மதுகம கல்வி வலயத்தை மையமாகக் கொண்ட இந்த திட்டத்தின் முதல் கட்டமான நல்ல குடியுரிமை முன்முயற்சிகளின் 'சியட் கெயார்ஸ்' கொள்ளளவின் ஒரு பகுதியானது, சியெட் டயர்களை அதிகம் பயன்படுத்தும் இலங்கை இராணுவத்தின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இத்திட்டத்தின் மூலம் பல்லேகொடவில் அமைந்துள்ள பல்லேகொட தமிழ் பாடசாலை மற்றும் இட்டப்பனவிலுள்ள மிரிஸ்வத்த தமிழ் பாடசாலை ஆகிய இரண்டு பாடசாலைகளும் முதலாவதாக பயனடைந்துள்ளன.

> **மேலும் சில செலவுகளை ஈடுசெய்யவும், மாணவர்கள் இடைவிலகல் விகிதத்தைக் குறைக்கவும் எமது இந்த திட்டத்தால் உதவ முடியும். இது எங்களின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு**

இந்த பாடசாலைகளை அண்மையில் சியெட் மற்றும் இலங்கை இராணுவத்தின் பிரதிநிதிகளால் பார்வையிடப்பட்டதுடன், 119 மாணவர்களுக்கு பாடசாலை பைகள், காலணிகள் மற்றும் எழுதுபொருட்கள் போன்றவற்றுடன் சத்தான மதிய உணவும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சித் திட்டம் குறித்து சியெட் களனி முகாமைத்துவப் பணிப்பாளர் ரவி தத்லானி கருத்துத் தெரிவிக்கையில், 'இறப்பர் விவசாயிகள் எமது டயர் உற்பத்திச் செயற்பாட்டிற்கு இன்றியமையாதவர்கள் என்பதால், அவர்களின் அன்றாட வாழ்வில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எமக்கு கவலையளிக்கிறது. மாணவர்களின் கல்வி செலவு மிகவும் உயர்ந்துள்ளது. இந்நிலையில், மேலும் சில செலவுகளை ஈடுசெய்யவும், மாணவர்கள் இடைவிலகல் விகிதத்தைக் குறைக்கவும் எமது இந்த திட்டத்தால் உதவ முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். இது எங்களின் கூட்டாண்மை சமூகப் பொறுப்புணர்வு நோக்கங்களுடன் நன்றாக ஒத்துப்போகிறது" என்றார்.



# குறும்பாக்கள்


தெறித்து விழுந்ததொரு சொல்லு
தேடியும் கிடைக்கவில்லைப் பல்லு
வெறியில் முற்றியவன்
வீரமொன்று காட்டியதில்
பறித்ததவன் பல்லையொரு கல்லு.
...

கொடுக்கிறாராம் கோவிலிலே தானம்
கோவிலும் அவர்பெயரில் தானாம்
எடுக்கின்ற நிதிப்பணமோ
நேரே அவர்வீட்டினுள்ளே
வெடுகெனவே விரையுமாம் நாளும்.
...

இல்லாளின் நகைபார்த்து எரிச்சல்
இருப்போரின் மனதுள்ளே குமைச்சல்
கல்லாத மாந்தரன்றி
கற்றோரும் அவம்கொண்டு
சொல்கின்ற வார்த்தைகளில் அவிச்சல்.
...



– அலெக்ஸ் பரந்தாமன்
புதுக்குடியிருப்பு



# ஒருவிரல் புரட்சியே !..



மக்களின் பார்வை
சுருங்கியஉலகம்
பிரச்சினையின் முகங்கள்
பக்கமும் யாரும்
தலைவாசல்
இல்லைதான்
கிடைக்கதேவை
நியதியாரிற்கும்?

ஆத்திரம் அடைந்தார்
ஆட்கள் இங்கில்லை
இவ்விடமும் வரவில்லை
வாய்மூடி கனவுலகம்
எதிர்காலம் கரைபோகும் கலக்கம்
நொடிபேசும் மக்கள்
கலங்கம்

போடும் பிச்சையை
அளவறிய இல்லையாம்
அடைக்கலம் கொடுத்து
அவதியுறும் மக்களாம்
வீதியில் இரங்கிதட்டிகேட்குதாம்

ஆதங்கத்தைதிட்டிதீர்த்து
தொடக்கமாம் !
இனியாரின் அற்பஆட்டத்திற்கும்
முற்றுப்புள்ளியாம்..
மக்களின் உணர்ச்சியாய்
ஒருவிரல் புரட்சி...

– வியாத்தன்

# நிழலாய் நீயே




தோழனாய் நின்று
தோழிற் தாங்கினாய்
ஆலகால நஞ்சுண்ட
ஆதி சிவன் நீயாகி
எமைக்காக்க வந்தாய்
ஆழியிடை முத்தாய்
அரும் பெருஞ் சொத்தாய்
பெருந்தவப் பயனாய்
வந்துதித்தாய்
தாய் மாமனாய்

முக வாட்டங் கண்டும்
குரற்றழும்பல் கண்டும்
கண்டறிவாய் நிலைமையை
அறிவுரையில் ஆசானாய்
அன்பினில் வள்ளலாய்
ஆளுமையில் அறிஞராய்
மொத்தத்தில் எம் ஐவருக்கும்
அரசனாய்
தாலாட்டக்கூட கேட்டோம்
தவப்பயனால்

பள்ளி வாயிலில்
வழி மேல் விழியது
உன் வருகை தேடி
துள்ளித் திரிந்ததெல்லாம்
உன் தோள் தாவி
முதல் எழுத்து
மணல் மேல் எழுதியதும்
உன்விரற் பிடியில்
தலை மேல் எழுத்து மட்டும்
உன் நினைவுகளுடன்
மட்டுமே வாழ...

– குகதா
கிளிநொச்சி



# ஒரு துளி

குனிந்தே இருக்கட்டும் பேனாக்கள்
நிமிர்ந்தே இருக்கட்டும் எண்ணங்கள்
கரையேது அறிவின் தேடல்கள்
நடவாது வீணரின் வேடங்கள்

மழையாக நிலம்தொடும் வரைதான்
உடலாக உயிர்விலகும் வரைதான்
முளையாக நிலமுடைக்கும் வரைதான்
ஊனமது மனம் காணும் வரைதான்

நிலையற்ற வாழ்வியலின் மோகமும்
திறனற்ற வார்த்தைகளின் சிதறலும்
நனவாகா சதுரங்க ஆட்டமும்
தூசெனவே கரைந்தே மறைந்திடும்

சீரிய சிந்தனையும் கொள்வோம்
சீற்றமதை கனவிலும் துறப்போம்
அறம்பழகி வாழ்வை செழிப்போம்
அன்பையே நாளும் விதைத்
திடுவோம்....

– கனக.தீபகாந்தன்





# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் – ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.


சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





## "எதிர்கால சந்தியிர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!





## பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:



**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**



## நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :.........................................
மாகாணம் :....................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# IORA தின ஓவியப் போட்டி 2024 விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர் :**.......................................................................................................

**பிரிவு :** ஆரம்ப (1-5 தரங்கள்) ☐   கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐   சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை :**.......................................................................................................

**மாகாணம் :**.......................................................................................................

**வீட்டு முகவரி :**.......................................................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர் :**.......................................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம் :**.......................................................................

**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் ........................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

..................................................
அதிபரின் கையொப்பம்



# சமைத்த உணவு வழங்கி வைப்பு...

அம்பாறை மாவட்டம், அட்டாளைச்சேனை பிரதேச செயலக பிரிவிலுள்ள திராய்க்கேணி தமிழ் கிராமம் வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.
குறித்த பகுதிக்கு புதன்கிழமை (03) இரவு சென்ற காரைதீவு முன்னாள் தவிசாளரும் பிரபல சமூக சேவையாளருமான கி.ஜெயசிறில், பாதிக்கப்பட்டவர்களுக்கு சமைத்த உணவை வழங்கி வைத்துள்ளார்.

– வி.ரி.சகாதேவராஜா





# “அயலவர்களுக்கு உதவுவோம்”

கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ்.எம்.சபீஸ் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அரிசி பொதிகள், "அயலவர்களுக்கு உதவுவோம் ஐந்தாம் கட்டம்" திட்டத்தின் கீழ் கிழக்கின் கேடயத்தின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களால் மாளிகைக்காடு, கல்முனை, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் புதன்கிழமை (03) வழங்கி வைக்கப்பட்டன.

– நூருல் ஹுதா உமர்





# “கலங்கரை தீபங்களுக்கு கௌரவம்”

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியின் (தேசிய பாடசாலை) 1997ஆம் ஆண்டு கல்விப்பொதுத் தராதர மாணவர்களின் ஏற்பாட்டில், கற்பித்த ஆசிரியர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு யாடோ ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (02) நடைபெற்றது.
“கலங்கரை தீபங்களுக்கு கௌரவம்” எனும் தலைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில், ஓய்வு பெற்ற அதிபர் கே.எல்.அப்துல் சமதுக்கு ஏற்பாட்டுக் குழுவினர் நினைவுப் பரிசு வழங்கி கௌரவிப்பதையும் ஏனைய ஓய்வு பெற்ற ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வியலாளர்கள் ஆகியோருடன் ஏற்பாட்டுக் குழுவினரும் காணப்படுகின்றனர்.

– எம்.எப்.றிபாஸ்







# துவிச்சக்கர வண்டி வழங்கிவைப்பு

மட்டக்களப்பு–புல்லுமலை, மாவளையாறு கைலன் வித்தியாலய மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கி வைக்கும் நிகழ்வு மாவளையாறு சமூக செயற்பாட்டாளர் ந.ராஜரட்ணம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் புதன்கிழமை (03) இடம்பெற்றது.
இந்நிகழ்வின் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.கே.முரளீதரன் கலந்து கொண்டு பாடசாலை மாணவ மாணவியருக்கு துவிச்சக்கர வண்டிகளை வழங்கி வைத்தார்.
ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவின் சின்ன புல்லுமலையில் உள்ள மாவளையாறு கைலன் வித்தியாலய மாணவர்களுக்கு நௌ வௌவ் சரிட்டி (*Now-Wow Charity*) நிதி அனுசரணையில் துவிச்சகர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டது.
இந்நிகழ்வில், ஏறாவூர் பற்று பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம், நௌ – வௌவ் சரிட்டி (*Now - Wow Charity*) நிறுவனத்தின் திட்டபணிப்பாளர் எஸ்.சசிகரன், கிராம சேவை உத்தியோகத்தர் பி.சுசிதரன், பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

– எம்.எஸ்.எம்.நூர்தீன்





# கௌரவிப்பு...













கினிகத்ஹேனை–கடவளை விக்னேஸ்வரா கல்லூரியில் 2022இல் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரியின் அதிபர் டி.தெய்வேந்திரன் தலைமையில் இடம்பெற்றுள்ளது.
இந்நிகழ்வில், ஹட்டன் கல்வி வலயத்தின் வலய கல்விப்பணிப்பாளர் ஆர்.விஜேயேந்திரன், மத்திய மாகாண மேலதிக கல்விப்பணிப்பாளர் ஏ.ஆர்.சத்தியேந்திரா மற்றும் ஹட்டன் கல்வி பணிமனையின் உதவி கல்வி பணிப்பாளர் ஏ.ஜி.வில்சன் ஆகியோர் கலந்து கொண்டுள்ளனர்.
இந்நிகழ்வு பெற்றோர்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

– இரா. யோகேசன்







இலண்டனில் வித்தியாலக்சுமி வயலின் பள்ளியின்

# மார்கழி உற்சவம்

இலண்டனில் கடந்த டிசெம்பர் 22இல் வயலின் ஆசிரியை ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் மாணவர்களால் வருடாந்த இசை ஆராதனை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வானது “அருணோதயமே” என்ற வர்ணத்துடனும் விநாயகர் கிருத்தியுடனும் இனிதே ஆரம்பித்தது.

இதனைத் தொடர்ந்து வந்தே மீனாட்சி, “ரம்ய நர்த்தனா”, ஜதீஸ்வரம், வர்ணம், தில்லானா என மாணவர்களின் வாசிப்பால் மண்டபமே மகிழ்வில் திளைத்திருந்தது. நின்னுக்கோரி, பாதிமம் பார்வதி, காக்கைச் சிறகினிலே, ஒளி படைத்த கண்ணினை போன்ற பல பாடல்களை மாணவர்கள் அதி அற்புதமாக வாசித்து அவையோரின் பலத்த கரகோசத்தைப் பெற்றனர்.

> மேடை நிறைந்த இசைக் கலைஞர் கண்ணுக்கும் காதுக்கும் இனிய விருந்தினை வழங்கி பஞ்சரத்தினத்தில் நனைய வைத்தனர்

இந் நிகழ்விற்கு பக்கவாத்திய இசைக் கலைஞர்களான சதீஸ் கௌண்தமால் மிருதங்கமும், தயாபரன் தனபாலன் கடமும், ஜெயகீர்த்தன் ஜெயதேவன் கஞ்சீராவும், சர்ஜுன் சிற்பரன் சுரத்தட்டு இசையையும், சேயோன் சிவலீலன் புல்லாங்குழல் இசையினையும் வழங்கி மேலும் மெருகேற்றியிருந்தனர்.

நிறைவாக பஞ்சரத்தினம் இடம் பெற்றது. இதில் ஸ்ரீமதி திலகசக்தி ஆராமுதனின் மாணவர்கள் வாய்ப்பாட்டினையும், ஜெசிக்கா நித்தியானந்தா வீணை இசையினையும் ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் மாணவர்கள் வயலின் இசையினையும் இணைந்து வழங்கியிருந்தனர்.



அதுமட்டுமன்றி ஆசிரியர்களான திலகசத்தி ஆராமுதன், சிவதர்சிகாவும் வாய்ப்பாட்டில் இணைந்திருந்தனர். வித்தியால ஆசிரியை ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் புதல்வன் சைந்தவன், புதல்வி லக்ஷிமியும் இணைந்து வயலின் இசையை வழங்கியிருந்தனர். மேடை நிறைந்த இசைக் கலைஞர் கண்ணுக்கும் காதுக்கும் இனிய விருந்தினை வழங்கி பஞ்சரத்தினத்தில் நனைய வைத்தனர்.

ஸ்ரீமதி கௌசல்யா சத்தியலிங்கத்தின் அன்பான இனிமையான கனிவு நிறைந்த பயிற்றுவிப்பை இந்நிகழ்வில் நன்கு உணரமுடிந்தது. வித்தியாலக்ஷ்மி என்ற பெயருக்கேற்றாற் போல, வயலின் இசையில் மாணவர்கள் வித்தையைக் காட்டி அவையோரை அகங் குளிர வைத்தனர். வருடம்தோறும் நடைபெற்று வரும் மார்கழி உற்சவமானது வருடங்கள் ஏற ஏற மேலும் மேலும் மெருகேறி நல்லதொரு தரமான நிகழ்வாக மிளிர்ந்துகொண்டே செல்வதில் பள்ளியின் ஆசிரியைக்கு மட்டுமன்றி கணவர் சத்தியலிங்கத்திற்கும் பெரும் பங்கு உண்டு என்பதை அறியமுடிந்தது. வருட நிறைவில் நல்லொதொரு இசையால் மனம் நிறைந்து வித்தியாலக்ஷ்மி பள்ளி மேலும் மேன்மையுற இறைவனை வேண்டுகிறேன்.

– அகல்யா நித்தியலிங்கம்





பிரித்தானியா

# “பெற்றோருக்கு இனி அனுமதி கிடையாது”



பிரித்தானியாவில் கல்வி கற்பதற்காக வெளிநாடுகளில் இருந்து வரும் மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் விதமாக அந்நாட்டு அரசு பல புதிய விதிமுறைகளை வகுத்துள்ளது.

அதில் முக்கிய அம்சமாக கல்வி கற்க அங்கு செல்லும் மாணவர்கள், இனி பெற்றோர் உட்பட தங்கள் குடும்ப உறுப்பினர்களை தங்களுடன் அழைத்து செல்லவோ, நுழைந்த பிறகு அவர்களை அங்கு வரவழைத்து தங்களுடன் தங்க வைத்து கொள்ளவோ அனுமதி கிடையாது. முதுநிலை ஆராய்ச்சி பட்டங்கள் மற்றும் அரசு நிதியுதவியுடன் பெறப்படும் பட்டங்கள் ஆகியவற்றை பயிலும் மாணவர்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானிய பல்கலைக்கழகங்களில் படிக்க விரும்பும் அனைத்து மாணவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்த அந் நாட்டு அரசு தீவிரமாக முனைந்துள்ளது.

புதிய விதிமுறைகள் இம்மாதத்திலிருந்தே அமுலுக்கு வரும் எனவும் பிரித்தானிய அரசு தெரிவித்துள்ளது.

“மக்களுக்கு பிரித்தானிய அரசு அளித்த வாக்குறுதியின்படி, எல்லைகளை பலப்படுத்துவது, அகதிகள் வருகையை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட விடயங்களில் கடுமையான நடவடிக்கை எடுக்க தொடங்கி விட்டோம்.

கல்வி கற்க “விசா” பெற்று கொண்டு வரும் பலர், பிறகு இங்கேயே பணி தேடி, பிரித்தானியாவிலேயே தங்கி விடுகின்றனர். இதனை தடுக்கும் விதமாக கொண்டு வரப்பட்டுள்ள புதிய வழிமுறை மூலம் சுமார் 1,40,000 பேர் பிரித்தானியா வருவது குறைய கூடும்” என பிரித்தானிய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து பிரித்தானிய பிரதமர் ரிஷி சுனக் தனது அதிகாரபூர்வ எக்ஸ் கணக்கில், “இன்றிலிருந்து இங்கிலாந்தில் கல்வி பயிலும் பெரும்பாலான அயல்நாட்டு மாணவ மாணவியர்கள் தங்கள் குடும்ப உறுப்பினர்களை அழைத்து வருவது முடியாது. 2024 தொடங்கியதுமே இங்கிலாந்து மக்களுக்கு நாங்கள் பணியாற்ற தொடங்கி விட்டோம்” என பதிவிட்டுள்ளார்.

2019லிருந்து தங்கள் குடும்ப உறுப்பினர்களை இங்கிலாந்திற்கு அழைத்து வரும் மாணவர்களின் எண்ணிக்கை 930 சதவீதம் அதிகரித்திருப்பதால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சீனா

## தன்னை கடித்த எலியை பழிவாங்கிய பல்கலை மாணவி

சீனாவில் தனியார் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்று வரும் 18 வயதான கல்லூரி மாணவியை எதிர்பாராதவிதமாக எலி ஒன்று கடித்துள்ளது.

இதனால் வலியால் துடித்த அந்த மாணவி ஆத்திரத்தில் அந்த எலியை பழிவாங்க நினைத்து, தன்னை கடித்த எலியை பிடித்து வெறித்தனமாக கடித்து வைத்துள்ளார். அதன் கழுத்து பகுதியில் பலமாக கடித்து தனது கோபத்தை தீர்த்துக்கொண்டார். அந்த மாணவியின் வெறித்தனமான கடியால் அந்த எலி பரிதாபமாக உயிரிழந்துள்ளது.


எலி கடித்ததில் காயடைந்த அந்த மாணவி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு ரேபிஸ் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. தொடர்ந்து மாணவிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அந்த மாணவி நலமாக இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும், இதுபோல யாரும் செய்ய வேண்டாம் என அந்த மாணவியின் தோழி எச்சரிக்கை விடுத்துள்ளார். இந்த சம்பவம் சீனாவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



அமெரிக்கா

## இறுதி எச்சரிக்கை விடுத்த அமெரிக்கா



ஹமாஸுக்கு எதிராக போர் பிரகடனம் அறிவித்து காசா மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஹமாஸ்க்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சி குழு செங்கடலில் செல்லும் சர்வதேச கப்பல்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது.

இதனால் அமெரிக்கா செங்கடலில் கண்காணிப்பை அதிகரித்துள்ளது. டிசெம்பர் 19ஆம் திகதியில் இருந்து 23 தாக்குதல்களை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தியுள்ளனர்.

கடந்த ஒருசில தினங்களுக்கு முன் கப்பல் மீது தாக்குதல் நடத்த வந்த ஹவுதியின் மூன்று படகுகளை அமெரிக்க கப்பற்படை தாக்கி அழித்தது. இதில் 10 ஹவுதி கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்தனர். கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதற்கு பதிலடி கொடுப்போம் என ஹவுதி தெரிவித்துள்ளது.

இந் நிலையில், “செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்குதலை நிறுத்த வேண்டும். இல்லையெனில் இராணுவ நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும்” என அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகள் அறிவித்துள்ளன.

தாக்குதல் தொடர்ந்தால் எந்தவிதமான பதிலடியில் ஈடுபடும் என்பது குறித்து அமெரிக்காவின் உயரதிகாரி விரிவாக தெரிவிக்க மறுத்து விட்டார். ஆனால், “அமெரிக்கா மற்றும் அதன் கூட்டணி நாடுகளிடம் இருந்து ஹவுதி கிளார்ச்சியாளர்கள் மற்றொரு எச்சரிக்கையை எதிர்பார்க்க முடியாது” என தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் அவுஸ்திரேலியா, பஹ்ரைன், பெல்ஜியம், கனடா, டென்மார்க், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், நெதர்லாந்து, நியூசிலாந்து சிங்கப்பூர், பிரித்தானியா ஆகிய நாடுகள் ஒன்று இணைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

புது டெல்லி

## உச்சநீதிமன்றத்தில் பொன்முடி மேன்முறையீடு

வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கில் முன்னாள் அமைச்சர் பொன்முடி குற்றவாளி என டிசெம்பர் மாதம் அறிவிக்கப்பட்ட நிலையில், அவருக்கும், அவரது மனைவிக்கும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து நீதிபதி தீர்ப்பளித்துள்ளார்.

மேலும் இருவருக்கும் தலா ரூ.50 லட்சம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அபராதம் செலுத்த தவறினால் மேலும் 6 மாத சிறை தண்டனையை அனுபவிக்க வேண்டும் என்று கூறியும், தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்ய ஏதுவாக 30 நாட்களுக்கு தண்டனை நிறுத்தி வைக்கவும் நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.



இந் நிலையில், சொத்துக்குவிப்பு வழக்கில் சென்னை உயர்நீதிமன்றம் விதித்த தண்டனையை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முன்னாள் அமைச்சர் பொன்முடி மேல்முறையீடு செய்துள்ளார்.

புதுடெல்லி

## அகதிகளுக்கு குடியுரிமை திருத்த சட்ட விதிகள் தயார்

குடியுரிமை திருத்த சட்ட விதிகள் தயாராகிவிட்டதாகவும் மக்களவைத் தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாக இதுகுறித்த அறிக்கை வெளியாகும் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

குடியுரிமை திருத்தச் சட்ட (சி.ஏ.ஏ) மசோதா கடந்த 2019 டிசெம்பர் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இதையடுத்து, இந்த சட்டம் 2020 ஜனவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வருவதாக இருந்தது. எனினும், இதற்கான விதிமுறைகள் வகுக்கப்பட்ட பிறகு இந்த சட்டம் அமுல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் ஒரிரு மாதங்களில் நடைபெற உள்ளது. இந்த சூழ்நிலையில், சி.ஏ.ஏ சட்ட விதிமுறைகள் தயாராகி விட்டதாக இந்திய அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. மேலும், இது தொடர்பான அறிவிக்கை பாராளுமன்ற மக்களவைத் தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாக வெளியிடப்படும் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து, மத்திய அரசு உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, “சி.ஏ.ஏ சட்டத்தை அமுல்படுத்த தனி இணையத்தளம் ஆரம்பிக்கப்பட்டு, அதன் மூலம்தான் அனைத்து நடைமுறைகளும் மேற்கொள்ளப்படும். அதில், எந்த ஆண்டில் இந்தியாவில் (பயண ஆவணம் இல்லாமல்) தஞ்சமடைந்தோம் என்பதை மனுதாரர்கள் குறிப்பிட வேண்டி இருக்கும். இதற்காக எந்த ஆவணமும் கேட்கப்பட மாட்டாது” என்றார்.

சிம்பாப்வேக்கெதிரான தொடருக்கான

# இலங்கை குழாமில் அவிஷ்க, தனஞ்சய, வன்டர்சே



சிம்பாப்வேக்கு எதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இலங்கைக் குழாமில் அவிஷ்க பெர்ணாண்டோ, ஜெஃப்ரி வன்டர்சே, அகில தனஞ்சய ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இதில் அவிஷ்க, வன்டர்சே ஆகியோர் ஓராண்டுக்குப் பின்னரும், தனஞ்சய மூன்றாண்டுகளுக்குப் பின்னரும் இலங்கைக் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ணத் தொடருக்கான குழாமில் இடம்பெற்ற குசல் பெரேரா, திமுத் கருணாரத்ன, தனஞ்சய டி சில்வா, துஷான் ஹேமந்த, மதீஷ பத்திரண, லஹிரு குமார, கசுன் ராஜித, சாமிக கருணாரத்ன, அஞ்சலோ மத்தியூஸ் ஆகியோர் இக்குழாமில் இடம்பெறவில்லை.

இவர்களுக்குப் பதிலாக அவிஷ்க, வன்டர்சே, தனஞ்சயவுடன், வனிடு ஹஸரங்க, பிரமோத் மதுஷன், ஜனித் லியனகே, நுவனிடு பெர்ணாண்டோ, சஹான் ஆராச்சிகே ஆகியோர் குழாமில் இடம்பெற்றுள்ளனர்.

குழாம்: குசல் மெண்டிஸ் (அணித்தலைவர்), சரித் அசலங்க, பதும் நிஸங்க, அவிஷ்க பெர்ணாண்டோ, சதீர சமரவிக்கிரம, சஹான் ஆராச்சிகே, நுவனிடு பெர்ணாண்டோ, தசுன் ஷானக, ஜனித் லியனகே, மகேஷ் தீக்ஷன, டில்ஷான் மதுஷங்க, துஷ்மந்த சமீர, டுனித் வெல்லலாகே, பிரமோத் மதுஷன், ஜெஃப்ரி வன்டர்சே, அகில தனஞ்சய, வனிடு ஹஸரங்க.

இலங்கையின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவராக

## திமுத்தைப் பிரதியிட்ட தனஞ்சய



இலங்கையணியின் டெஸ்ட் போட்டிகளுக்கான அணித்தலைவராக திமுத் கருணாரத்னவை தனஞ்சய டி சில்வா பிரதியிடுவாரென இலங்கை அணியின் தலைமைத் தேர்வாளர் உபுல் தரங்க உறுதிப்படுத்தியுள்ளார்.


இதுவரையில், 51 டெஸ்ட்களில் 39.77 என்ற சராசரியில் 3,301 ஓட்டங்களைப் பெற்றுள்ள டி சில்வா, 34 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்பானிய லா லிகாத் தொடர்:

## ஜிரோனாவிடம் தோற்ற அத்லெட்டிகோ

ஸ்பானியன் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லா லிகாத் தொடரில், ஜிரோனாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 3-4 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ மட்ரிட் தோற்றது.

அத்லெட்டிகோ சார்பாகப் பெறப்பட்ட மூன்று கோல்களையும் அல்வரோ மொராட்டா பெற்றார். ஜிரோனா சார்பாக வலேரி பெர்ணாண்டஸ், சவியோ, டலி பிளைண்ட், இவான் மார்டின் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.





தென்னாபிரிக்காவுக்கெதிரான தொடரைச் சமப்படுத்த

## இந்தியாவுக்கு 78 ஓட்டங்கள் தேவை

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரைச் சமப்படுத்துவதற்கு இந்தியாவுக்கு 78 ஓட்டங்கள் தேவையாகவுள்ளது.

இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே இழந்துள்ள இந்தியா, கேப் டௌணில் நேற்று முன்தினம் ஆரம்பமான இரண்டாவது டெஸ்டின் முதலாவது இனிங்ஸில் 55 ஓட்டங்களுக்குள் தென்னாபிரிக்காவை சுருட்டியது.

தொடர்ந்து தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்தியா, சகல விக்கெட்டுகளையும் இழந்து, 153 ஓட்டங்களைப் பெற்றது. இதில், விராட் கோஹ்லி 46, றோஹித் ஷர்மா 39, ஷுப்மன் கில் 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், ககிஸோ றபாடா, நன்ட்ரே பேர்கர், லுங்கி என்கிடி ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இதையடுத்து, தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ஜஸ்பிரிட் பும்ரா (6), முகேஷ் குமார் (2), மொஹமட் சிராஜ், பிரசீத் கிருஷ்ணாவிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 176 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், ஏய்டன் மார்க்ரம் 106 ஓட்டங்களைப் பெற்றார்.

அந்தவகையிலேயே இப்போட்டியை வென்று தொடரைச் சமப்படுத்துவதற்கு 78 ஓட்டங்களை இந்தியா பெற வேண்டியுள்ளது.

பாகிஸ்தானுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில்

## முன்னிலையில் அவுஸ்திரேலியா

பாகிஸ்தானுக்கெதிரான மூன்றாவது டெஸ்டில் முன்னிலையில் அவுஸ்திரேலியா காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் தோற்று, தொடரை ஏற்கெனவே பாகிஸ்தான் இழந்துள்ள நிலையில், சிட்னியில் நேற்று முன்தினம் ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய இரண்டாம் நாளை விக்கெட் இழப்பின்றி ஆறு ஓட்டங்களுடன் ஆரம்பித்த அவுஸ்திரேலியா 34 ஓட்டங்களுடன் டேவிட் வோர்னரை அக்ஹா சல்மானிடம் இழந்தது.



தொடர்ந்து 47 ஓட்டங்களுடன் உஸ்மான் கவாஜாவை ஆமிர் ஜமாலிடம் இழந்த அவுஸ்திரேலியா, போதிய வெளிச்சமின்மை மற்றும் மழை காரணமாக நேற்றைய நாள் முன்னரே முடிவுக்கு வந்தபோது 2 விக்கெட்டுகளை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. களத்தில் மர்னுஸ் லபுஷைன் 23 ஓட்டங்களுடனும், ஸ்டீவன் ஸ்மித் ஆறு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 05, ஜனவரி 2024, இல. 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.